Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, HARUR

| | |
|---|---|
| Calendar<br>Misscellancous<br>Preliminary Register<br>Sessions | **Case No. CC 227 /2018** |
| Deposition of **PW5** | Prosecution<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செல்வராஜ் |
| Father's Name/Husband Name | : | த/பெ. பெரியசாமி |
| Village | : | திண்டிவனம் |
| Taluk | : | திண்டிவனம் |
| District | : | திண்டிவனம் |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21th** Day of **September 2022.**

திரு. செல்வராஜ்

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு வனத்துறையில் வனக்காப்பாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று திண்டிவனத்தில் வசித்து வருகிறேன். நான் கடந்த 20.02.2017 ம் தேதி காலை 4 மணிக்கு வனச்சரகர் அலுவலர் தலைமையில்

ரோந்துபணிக்கு சென்றுகொண்டிருந்தோம். வனவர் மாதேஸ்வரன், வேடியப்பன் வனக்காப்பாளர், K. செல்வராஜ் வனக்காப்பாளர், ராஜா வனக்காவலர் ஆகியோர்கள் அரூர் பீட்டில் பெரியபள்ளம் சராகத்தில் ரோந்து பணியின்போது சோலைக்கொட்டாயை சேர்ந்த அர்ஜுனன் என்பவர் 22 எக்லேட்டர் ஒயர்களைக்கொண்டு காட்டில் வனவிலங்குகளை வேட்டையாட முயற்சித்துக்கொண்டிருந்தார். அவரை பிடித்து விசாரித்தபோது அவர் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக எக்ஸ்லேட்டர் ஒயர்களை வைத்திருந்தாக ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதன் பின்னிட்டு எதிரி அர்ஜுனன் வைத்திருந்த எக்ஸ்லேட்டர் ஒயர்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். பின்னர் எதிரி மற்றும் பிடிப்பட்ட பொருட்களை வனச்சரக அலுவலத்திற்கு கொண்டுவந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**